# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல் : 23 யாழ்ப்பாணம் ஒக்ரோபர் 1998




## யாக்கோபு எப்படி நிலை நிற்கப்போகின்றான்?

ஆசிரியுரை :

ஒன்றன் பின் ஒன்றாக கொடூரம் பெருகிக்கொண்டே இருக்கிறது ஆமோஸ் 7 ம் அதிகாரத்தில் திரும்பவும் திரும்பவும் செபத்தில் கேட்கப்படும் வினாவைக் கேட்க எவர் உள்ளார்?

''மிகச் சிறிய யாக்கோபு எப்படி நிலை நிற்கப்போகின்றான்?'' ஆமோஸ் 7 : 2

இதையே லாசலேத்தினதும் பாத்திமாவினதும் செய்திகள் கூறுகின்றன. செபம், தபம், பலியாக்கும் அன்பு, பரித்தியாகம்.

வரும் கொடூரங்கள்பற்றி தீர்க்கதரிசிகள், பழைய ஏற்பாட்டிலும், யேசு புதிய ஏற்பாட்டிலும் சொல்லக்கேட்கிறோம். புனிதரான நில்லியூசின் தீர்க்கதரிசனம் எமக்கு நன்கு பொருந்தும் அல்லவா?

கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம் இரத்தக்களரிகள் ஒருபுறம் ஏராளமான படையினர்; மறுபுறம் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள்; தொடர்ந்தும் லயன் ஏயர் சம்பவம் நாளந்தம் நீளும் முடிவில்லாத மரணப் பட்டியல்

''தலைவராகிய ஆண்டவர் எனக்குக் காட்டிய காட்சி இதுவே, அரசனுக்கென முதல் புல்லறுப்புச் செய்தான பின், இரண்டாம் பருவத்தின் புற்கள் துளிர்க்கத்தொடங்கும் வேளையில், அவர் வெட்டுக்கிளிக் கூட்டங்களை உருவாக்கிக்கொண்டிருந்தார். நாட்டிலிருந்த புல்லையெல்லாம் அவை தின்று தீர்த்துக்கொண்டிருந்த வேளையில் நான் ''இறைவனாகிய ஆண்டவரே மன்னித்தருளும் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். யாக்கோபு எப்படி நிலை நிற்கப் போகிறான்? அவன் மிகச் சிறியவன் அல்லவா''? என்றேன். ஆண்டவரும் இது குறித்து மனம் மாறினார். ''இது நிகழாது'' என்றார்.

''தலைவராகிய ஆண்டவர் தண்டனைத் தீர்ப்பாக நெருப்பு மழையை வருவித்தார். அந்த நெருப்பு ஆழ்கடலை வற்றச்செய்து நிலத்தையும் விழுங்கிக் கொண்டிருந்தது.'' நான் தலைவராகிய ஆண்டவரே இதை நிறுத்தியருளும். உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன் யாக்கோபு எப்படி நிலை நிற்கப் போகிறான். அவன் மிகச் சிறியவன் அல்லவா?'' என்றேன். ஆண்டவரும் மனம் மாறினார். 'இதுவும் நிகழாது' என்றார். (ஆமோஸ் 7: 1—9)

ஆமோசின் காட்சிகளில் வரும் மூன்று நிகழ்வுகள் - வெட்டுக்கிளி — நெருப்பு - தூக்கு நூல் குண்டு.

இதற்கு மறுமொழியாக, சிங்கள பகுதிகளில் தேவாயின் சில அற்புத காட்சி நிகழ்வுகள் — குறிப்பாக நற்கருணை நாதரின் பொற்பாத்திரத்திலிருந்து எழுந்த ஒளிப்பிழம்பு.

காட்சிகள் எனக் கேள்வியுற்றதும் வேடிக்கை பார்க்கவென சரமாரியாக வந்து கூடும் கூட்டம் வேறு மேபுட்டுவ (மொறட்டுவா) ஆலயத்தின் முன்னால் இரு கிலோ மீற்றர் நீளத்தில் இந்த ஜனத்திரளை ஏற்றி வந்த ஓட்டோக்கள், டாக்சிகள், மோட்டார் வாகனங்கள், பேரூந்து வண்டிகள் வரிசை வரிசையாக.

சிலுவைப் பிரகாசத்தை - அன்னையின் நிழலுருவை - சுரண்டிப் பார்க்க முனைந்த சிங்கள பௌத்த வாதிகளும் அவர்களைத் தடுத்து வெளியேற்றிய விசுவாச வீரமிக்க சிங்கள கத்தோலிக்கரும் என வந்த செய்திகள் வேறு. முக்கியம் எது? காட்சியா? அறிவுறுத்தலா?

ஆமோஸ் தீர்க்கர் மூன்று காட்சிகளைக் கண்டு செய்தியை அறை கூவுகிறான்.

லாசலேத்தில் தேவதாய் அழுது கொண்டு, ''ஏன் கண்ணீர் வடிக்கிறேன்?'' என்று ஒரு முக்கிய செய்தியை அல்லவா அறிவிக்கிறாள்.

பாத்திமாவில் 1917 ஒக்ரோபர் 13ல் மூன்று சிறுவர்கட்கு மனந் திரும்புதற் செய்தியைக் கொடுத்த தேவதாய் அதே சமயம் 70,000 மக்கள் காண, சூரியன் சுழல் புதுமையைக் காட்டி தன் செய்தியின் கனாகனத்தை உறுதிப்படுத்தினாள்.

இங்கு ஏராளமான சிங்கள படையினரது அழிவின்பின், அங்கு அவர்கள் மாதாவின் மனந் திரும்புதற் செய்திக்கு எவ்வளவு தூரம் செவி சாய்க்கின்றனர்?

மொறட்டுவா, களுத்துறை, டாவில்லா காட்சிகள் தெற்கில் பெருகும் இரத்த வெள்ளத்தை நிறுத்தக் கொடுக்கப்படும் செய்தி அல்லவா?

சிங்கள கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக எழப்போகும் வேதகலாபனை

(5ம் பக்கம் பார்க்க)

### ஆன்மீக வரட்சியா?

யாழ் குடாநாட்டில் கோவில்களில் வன்னிப் பட்டினிச்சாவுக்கும் குண்டு பொழிவுக்கும் எதிராக ஒரு நாள் உண்ணாவிரதம் என்று தீர்மானித்துவிட்டு கொய்யாத்தோட்டம், பாண்டியன் தாழ்வு, ஊர்காவற்றுறை, முகமாலை பங்குகள் தவிர ஏனையவை எல்லாம் வெறும் காசு சேர்ப்பதோடு நின்றுவிட்டன. ஆன்மீக வரட்சியின் குறியீடா? என வினவத் தோன்றுகின்றது.

30,000 ரூபாய்களை விட முப்பது இடங்களில் ஒரு நாள் உபவாச செபம் இன்னும் அதிகம் சாதித்திருக்காதா.?

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

உலக இரட்சகருடைய பிரசங்கத்தின் ஆரம்ப வரலாறு:-

யேசுவிற்கு இருபத்தேழு வயது நடக்கும்போது அவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். சிலவேளை மூன்று நாட்களுக்குக் கூட தமது தாயாரிடம் வராமலிருப்பார். தேவமாதா அதனால் வியாகுலப்பட்டு சம்மனசுக்களை அனுப்பி அவர் செய்பவற்றை அறிந்துகொள்வாள். அவர் வீட்டிற்கு வரும்போது தெண்டனிட்டு வணங்கி நமஸ்காரம் பண்ணுவாள். அவர் மூன்று நாட்கள் சாப்பிடாமலும் இளைப்பாறாமலுமிருப்பதினாலே அவருக்கு ஏற்ற சிறிய உணவுப பொருட்களைச் செய்து கொடுப்பாள். தாமும் அவரோடு கூடவர அவள் கேட்டுக்கொண்டதனால் ஆண்டவர் அவளுக்கு உத்தரவு கொடுத்தார். ஆண்டவர் நசரேத்துச் சுற்றுக் கிராமங்களில் உலக இரட்சகரின் வருகையை அறிக்கையிடுமுன்ன சனங்களின் ஆயத்த நிலைப்படி இருதயத்தில் அருளைப் பொழிவார். படித்தவர்களுக்கு தீர்க்கதரிசனங்களைக் கொண்டும் படியாதவர்களுக்கு மூன்று இராசாக்கள் வந்ததையும பாலர்கள் கொல்லப்பட்டதையும பற்றி பிரசங்கம் செய்வார். ஒவ்வொருவரின் மனங்களையும் அறிந்து அவர்களின் தேவைக்கேற்ப பேசுவார். வருத்தங்களினால துன்பப்படுவோரைப் பேரிய பார்த்து ஒருவரும் அறியாமல் அற்புதமான சுகங்களையும் கொடுப்பார். தேவமாதா அவர் செய்வதையெல்லாம் பார்த்து மகிழ்ந்து பெண்களுக்கு வேத உபதேசம் செய்வாள். அக்காலத்தில் தேவமாதாவும் சம்மனசுக்களும் மாத்திரம் இரட்சகரைப் பின்சென்று கொண்டிருப்பார்கள். ஏனென்றால் சனக்கூட்டம் அதிகமாக அவருடன் கூட வர மாட்டார்கள். ஏழை எளியவர்களுக்குத் தாழ்ச்சியிருப்பதனால் அவர்களுக்கே விசேஷமாகப் போதிப்பார்.

அக்காலத்தில் சக்காரியா மகனாகிய ஸ்நாபக அருளப்பர் வனாந்தரத்தில் உயர்ந்த பரவசத்தில் இருக்கும்போது வனாந்தரத்தைவிட்டு இரட்சகரை அறிவிக்கக் கடவுளுடைய கட்டளை அவருக்கு உண்டாகியிருந்தது. அப் பரவசத்தில் தேவனுடைய வாக்கைக் கேட்டு அவர் வனாந்தரத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் ஒட்டகத்தோலை இடையிற்கட்டி பாதரட்சையின்றி நடப்பார். அவர் முகம் தபசின் கடுமையால் வெளுத்திருந்தாலும் அதில் ஞானத்தின் ஒளி பிரகாசிக்கும். அவர் ஆழ்ந்த தாழ்ச்சி கொண்டு சிரவணம் பொருந்தி இருப்பார். உறுதிகொண்ட அவர் ஆத்துமம் தேவசிநேக பிறர் சிநேகத்தால் பற்றியெரியும். பிடிவாதமும் வன்நெஞ்சத் தனமும் நன்றிகெட்ட தனமும் கொண்டு அஞ்ஞான அதிபர்களாலே நடத்தப்பட்டு, ஆங்கார உலோபத்தனம் பொருந்திய ஆசாரியர்களினாலே போதிக்கப்பட்டிருந்த எபிரேய சனங்களுக்கு இவர் உலக இரட்சகர் வருதலை அறிவிக்கப் போனபடியால் அதற்குத் தக்க வரங்கள் அவருக்கிருந்தன. அவர் வனாந்தரத்திலிருக்கும்போது சம்மனசுக்களிருவருக்குச் செய்து கொடுத்திருந்த சிலுவைக்கு முன்பாக இரண்டு கைகளையும் விரித்து சாஷ்டாங்கமாக விழுந்து செபம் பண்ணுவார். இச்சிலுவையை அவர் பிரசங்கம் பண்ணுங் காலத்தில் சம்மனசுக்கள் வழியாய் தேவமாதாவுக்குக் காணிக்கையாக அனுப்பினார். அவளும் எதிர்காலப் பரம இரகசியத்தை நினைத்து வியாகுலப்பட்டு மகா தாழ்ச்சி வணக்கத்துடன் அதை முத்தி செய்து தமது செபக்கூடத்தில் வைத்தாள். அதைத்தான் பின்னால் சொல்லப்போகிறபடி அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணப் போகும்போது அவர்களுக்குக் கொடுத்தார்.

யேசுவிற்கு முப்பது வயது நடக்கும்போது தேவ சிம்மாதனத்திலின்று புறப்பட்டு வந்த ஒரு சத்தத்தைக் கேட்டாள். அதில் யேசுவை தமக்கு பலியாக ஒப்புக்கொடுக்கும்படி கேட்கப்பட்டது. அவ்வாக்கியத்தைக் கேட்ட பரிசுத்த மரியாள் ஆனந்த அன்புகொண்டு மகா கீழ்ப்படிதலோடு அவரைப் பலியாக ஒப்புக் கொடுத்தாள். பின் இவள் ஒரு பரவச காட்சி கண்டாள். அதில் அவளுடைய திருக்குமாரன் பிரசங்கத்தினாலேயும் பாடுகளினாலேயும் மரணத்தினாலேயும் ஆகப்போகிற மனிதருடைய இரட்சணியத்தின் பரம இரகசியத்தைத் தெளிவாய்க் கண்டாள். அக்காட்சி அவளை விட்டுவிட்டவுடனே மனிதர்களுடைய இரட்சணியத்திற்காக தேவசித்தம் தமக்கு நியமித்திருக்கிற காரியங்களை நிறைவேற்ற யேசுநாதர் இவளிடத்தில் வந்து உத்தரவு கேட்டார். தேவமாதா அவருடைய பாதத்தில் தெண்டனாக விழுந்தாள். அப்போது யேசுநாதர் எமது தாயை அணைத்தபோது இருவரும் கண்ணீர் சொரிந்தார்கள். அப்போது உலக இரட்சகர் ஸ்நாபக அருளப்பர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும் திருமுழுக்குக் கொடுத்துக்கொண்டும் இருந்த யோர்தான் நதிக்கு வந்து சனங்களோடு கலந்துகொண்டு திருமுழுக்குக் கேட்டார். அருளப்பர் உள்ளத்தில் ஒளிகொண்டு அவருக்கு முன்பாக தாழ்ச்சி வணக்கத்துடன் தமக்கு திருமுழுக்குத் தரும்படி கேட்டு நின்றார். பின்பு யேசுவிற்குக் கீழ்ப்படிந்து சுவிசேஷத்தில் சொல்லியிருப்பதுபோல அவருக்கு திருமுழுக்குக் கொடுத்தார். அப்போது இவரே நமக்கு அன்பான மகன் என்ற வாக்கு கேட்கப்பட்டது. மாடப்புறா ரூபமாக பரிசுத்த ஆவியானவர் அவரிடத்தில் இறங்கியதைப் பார்த்தார்கள். அதனால் அவருடைய தெய்வீகம் வெளிப்பட்டது. பின்பு யேசுநாதர் அருளப்பருடைய மன்றாட்டைக் கேட்டு அவருக்கு கிறிஸ்தவ திருமுழுக்கைக் கொடுத்தார். அப்போதுதான் திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனம் ஏற்பட்டது.

பின்பு யேசுநாதர் காடுகளும் மலைகளும் சூழ்ந்த வனாந்தரத்தை நோக்கி சம்மனசுக்கள் புடைசூழப்பட்டுப் போனார். அவ்விடத்தில் ஒருவரும் அறியாத குகை இருந்தது. அங்கே சென்று பரமபிதாவிற்கு வணக்கம் செலுத்தி சிலுவை வடிவாகக் கையை விரித்து முழுமையாக தெண்டனாக விழுந்து மனித பாவங்களுக்காக செபம் செய்தார். அவர் செபம் செய்யும்போது பல முறை அவருக்கு இரத்த வியர்வை வியர்க்கும். மிருகங்களும் பறவைகளும் வந்து மனுரூபமான தமது தெய்வத்தை அவ்விடத்தில் வணங்கும். தமது திருக்குமாரன் வனாந்தரத்திற்குச் சென்று ஞானவேகாந்த அஞ்ஞாதவாசத்தில் பிரவேசித்திருக்கிறாரென்று அறிந்து தேவமாதா தமது அறைக்குள் சென்று பாவிகளுக்காக வேண்டி இரத்தக் கண்ணீர் விட்டு அழுவாள். அவர் எப்படிச் செபம் செய்கிறாரென்றும் என்னென்ன கிரிகைகள் செய்கிறாரென்றும் சம்மனசுக்கள் இவளுக்குத் தெரிவிக்கும். இவளும் அடிக்கடி தமது பேராலே சம்மனசுக்களை அவ்விடத்திற்கு அனுப்பி வைப்பாள். அவருக்குண்டாகும் இரத்த வியர்வைகளைத் துடைக்கத் தமது கையாற் செய்த துணிகளை அவருக்கு அனுப்பி வைப்பாள். யேசுநாதர் நாற்பது நாள் அஞ்ஞாதவாசத்திலிருந்தது போல இவளும் நாற்பது நாட்கள் அஞ்ஞாதவாசத்தில் இருந்தபடியால் இவளும் யேசுவோடு கூட எங்கேயோ போய்விட்டாளென்று சனங்கள் எண்ணிக்கொண்டேயிருந்தார்கள். யேசுநாதர் வனாந்தரத்தில் எப்படிச் செய்வாரோ அப்படியே இவளும் இரவும் பகலும் செய்வாள். நாற்பது நாட்களும் இவள் ஒன்றுமே சாப்பிட்டதும் இல்லை. குடித்ததும்

(4ம் பக்கம் பார்க்க)

# லாசலேத்தில் தேவதாய் விடுத்த அதிர்ச்சிதரும் செய்தி

## இன்று மீண்டும் நினைவூட்டப்படுகிறது,

1846ம் ஆண்டு அல்ப்ஸ் மலைச்சாரலில், கடல்மட்டத்திலிருந்து 1100 மீற்றர் உயர்ந்த குக்கிராமத்தில் தேவதாய் காட்சி கொடுத்தாள். நல்ல இனப் பசுக்களையும், ஏனைய கால்நடைகளையும் வளர்த்துப் பிழைக்கும் அக் கிராமவாசிகளின் இரு பிள்ளைகள் மக்சிமினே கிரா (வயது 11) என்ற சிறுவனுக்கும், மெலானியா கல்வா (வயது 14) என்ற சிறுமிக்கும் 1846 செப்ரெம்பர் 19ல், மந்தைகளை கண்காணித்துக் கொண்டிருந்தபோது அன்னையின் தரிசனம் கிடைத்தது.

ஒரு கற்பாறைமீது இருந்த தேவதாய் தன் இரு கைகளாலும் முகத்தைப் புதைத்தவண்ணம் அழுதுகொண்டிருந்தாள், அவளது கண்களிலிருந்து சொரிந்த கண்ணீர் இரு கன்னங்களிலும் வழிந்துகொண்டிருந்தது. இப் பரிதாப கோலத்தில் தேவதாய் அச் சிறுவர் மூலம் உலகுக்கு அன்று விடுத்த செய்தி, இன்று மெக்சிக்கோ நாட்டு பரவசதியான யோகியும் நவீன தீர்க்கதரிசனருமான அருட்சகோதரி கேர்மானாகுவாடுலுப்பே மூலமாக புதுப்பிக்கப்படுகிறது.

கௌததமாலாவில் 1990 மே 27ல் இச் செய்தி மீண்டும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

உலகிலும் திருச்சபையிலும் குழப்பமும் இருளும் உண்டு அன்று அழுததுபோல இன்றும் அழுகிறேன். ஏனெனில் என் பிள்ளைகள் எனக்குச் செவிசாய்க்காமல், எதிர்நோக்கில் இருக்கும் சுத்திகரிப்பை நோக்கி விரைகின்றனர். அது நெருப்பினாலும் இரத்தத்தினாலும் நிறைவேறும். முன்னர் மலசல கிடங்குகள் போன்று கிடந்தவை இன்று காமச்சேறு நிறைந்த சவக்குழிகள் போன்று மாறி, பெரும் அழிவுக்குள் மனிதகுலம் விழப்போவதை நினைத்து அழுகிறேன்.

குருக்கள், கன்னியர்களான என் பிள்ளைகள் இச் செய்தியை ஏற்காதது பற்றிப் பின்னர் துக்கப்படுவார்கள். இறைவனை முழு உள்ளத்தோடும் முழு மனதோடும் முழு ஆன்மாவோடும், நேசிக்கவும், சரி பிழை எனத் தெரிந்து கொள்ளவும் இறை மக்களுக்கு கற்றுக் கொடுக்கும் பொறுப்பை திருச்சபை தன் குருக்களுக்குக் கொடுத்துள்ளது.

இதைக் குருக்கள் சரிவரச் செய்யாததனால் எதிர்க்கிறிஸ்து (அந்திக்கிறிஸ்து) தனது தப்பறைகள், இருள். குழப்பம், பாவம், ஆகியவற்றைப் பரப்புவதற்கு, தங்களை அறியாமலே உதவி செய்கின்றனர். லாசலேத்தின் செய்தி இதுவே.

‘‘குருக்கள் என் குமாரன் யேசுவின் பணியாளர்கள் அவர்களின் அவசங்கைகளினால் - பக்தி இல்லாத அவபக்தி நிலைகளால், திருப்பலி, திருவருட்சாதனங்களை நிறைவேற்றுகையில் காட்டும் அவசங்கை, அவமரியாதைகளினால் பண ஆசை, சிற்றின்பவேட்கை, பதவி மோகத்தினால், காம அசுத்தக் குழிகளாகிவிட்டனர்.

அன்பை அறிவிக்கத் தம் குருக்களை, என் மகன் யேசு அனுப்பினார். அவர்களோ மனிதனை இறைவனுக்கு அருகே கொண்டுவரும் இவ் உயர்ந்த நித்திய அன்புக்குப் பதிலாக புதிய கொள்கைகள், தப்பறையான சித்தாந்தங்கள், ஆன்ம அழிவைக்கொண்டுவரும் நவீன கருத்துக்கள் என்பவற்றுடன், பாவ வாழ்விலும் கொடிகட்டிப் பறக்கின்றனர்.’’ லாசலேத்தில் இதை நான் அறிவித்துள்ளேன்.

ஆம்! குருக்கள் இறை தண்டனையைத் தாமே வருவிக்கின்றனர். அது அவர்கள் தலைமேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. தங்கள் பிரமாணிக்கவீனத்தினால் என் மகனைத் திரும்பவும் சிலுவையிலறையும் குருக்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்டோருக்கும் ஐயோ கேடு. இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டோரின் பாவங்கள் விண்ணை நோக்கி ஓலமிடுகின்றன. அவையே தண்டனையை அழைக்கின்றன. தண்டனை இதோ கதவண்டை நிற்கின்றது. ஏனெனில் பாவிகளுக்காக பரிந்துரைப்போர், இரக்கத்தையும் மன்னிப்பையும் கேட்போர் (வேண்டுவோர்) அருகிவிட்டனர். உலகுக்காகத் தம்மை பரித்தியாக பலியாக்குவோர் இல்லாது போய்விட்டனர். இதனால் திருப்பலியின் உன்னத பலிப்பொருளை பிதாவுக்கு ஏந்த (காணிக்கையாக்க) தகுதியற்றவர்கள் ஆகின்றனர்.

குருக்கள் பணம், பெருமை, இன்பம் இவற்றையே நாடுகின்றனர். அவர்கள் சிலுவை, இரட்சணியம், ஆன்ம ஈடேற்றம் பற்றிப் பேசுவதில்லை. குருத்துவ அங்கியை அணிவதில்லை. அவர்கள் மனிதனை உலகை.. தெய்வமாக்கி, தம் உடலைப்பற்றியே கவனம் செலுத்துகின்றனர். இதற்காக திருச்சபையை அழிக்க அவர்கள் தயங்குவதில்லை. தங்களை இவ்வுலகின் அடிமைகளாக்கிக் கொண்டு தம் கரங்களை திருச்சபையின் எதிரிகளுக்கு நீட்டிக்குலவுகின்றனர். திருச்சபையைத் தன்புறுத்துவேரைப் புகழ்ந்துகொண்டு என் தெய்வீக மகன் யேசுவுக்கு புறமுதுகு காட்டி, சாத்தானோடு சேர்ந்து கொள்ளுகின்றனர். நல்ல குருக்களை. யேசுவுக்கு பிரமாணிக்கமாயிருக்க விரும்புவோரை, இவர்கள் எள்ளி நகையாடி, தன்புறுத்தி, தாழ்த்தி யேசுவை மறுதலிக்கத் தூண்டுகின்றனர்.

தம் விருப்பங்கட்கும் போக்குகட்கும் இசைவான போதனைகளை இவர்கள் பரப்புகின்றனர். இதனால் என் பிள்ளைகட்கு அத்தியாவசிய தேவையான மறை உண்மைகள் கிடைப்பதில்லை. இவர்களின் ஒரே முடிவு, என் பிள்ளைகளையும், திருச்சபையையும், கட்டுப்பாடற்ற உலோகாயுதப் போக்கினுள் சிறைப்படுத்தப்படுவதே.

எம்மத்தியில் உள்ள பலவீனமான, அக்கறை குன்றியவர்களை பிசாசு தீமைக்குள் கொண்டுவந்து சிக்கவைத்துவிட்டது. அவர்கள் தாங்கள் ஏமாற்றப்பட விட்டுக்கொடுத்ததினால், விழிப்புணர்வு மங்கி, வைராக்கியம் குன்றிப்போனதனால்; சாத்தான் திருச்சபைக்குள் நுழைந்தே அதை அழிக்க முடிகிறது. அது திருச்சபையை மட்டுமல்ல அதன் வாழ்வின் மையமான திருப்பலி நற்கருணையையும் அழிக்கிறது. திருப்பலி வெறும் கொண்டாட்டம் நிறைந்த ஒரு விருந்தல்லவே! அது ஒரு தெய்வீக இரத்தப்பலி.

என் அன்புக் குருமக்களே! உங்களுக்கு வரும் துன்ப துயரங்கள் மத்தியில், கிண்டல்கள் துன்புறுத்தல்கள் மத்தியில். என் மகனுக்கு பிரமாணிக்கமாக நிற்பவர்களே, உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும். இருள் உங்களை ஊடுருவ, உங்கட்குள் புகுந்து கொள்ள விடாதீர்கள். பிரமாணிக்கமாகவும், தளராமலும் இருங்கள். பிரமாணிக்கம் உள்ள தளராதோர் மீட்படைவர். ஓர் பெரிய தண்டனை உலகுக்கு வந்துவிட்டது லாசலேத்தில் நான் கூறியதை நினைவு கூருங்கள்.

‘‘முன்பு கேள்விப்படாத அளவுக்கு உலகை இறைவன் தண்டிப்பார். உலகில் வாழ்வோருக்கு ஐயோ கேடு. இறைவன் தன் கோபத்தை உலகின்மேல்

(4ம் பக்கம் பார்க்க)

# மெக்சிக்கோவில் ஒரு ஏழைக்கு தேவதாயின் காட்சி

[முன் தொடர்ச்சி]

வீடு திரும்பும்பொழுது அதே இடத்தில் தேவதாய் யுவானுக்காகக் காத்து நின்றாள், அவளின் முன் முழந்தாளில் விழுந்த யுவான் பேசத்தொடங்கினான். ''தாயே, உமது கட்டளைப்படி ஆயர் இல்லத்துக்குச் சென்றேன். இந்த ஏழையை யாரும் கவனிக்கவில்லை. பெரும் சிரமபபட்டுத்தான் ஆயரைச் சந்திததேன். என்னை வரவேற்று எனது பேச்சுக்குச் செவி சாய்த்தார். ஆயின் அவரது விடையிலிருந்து என் கதையை அவர் நம்பவில்லையென்பது நன்கு தெரிகிறது. மகனே நீ திரும்பவும் ஆறுதலாக வந்து என்னைச்சந்தி, நான் நீ சொன்னவற்றை சிந்தித்துப் பார்ப்பேன் என்றார். ''எனவே இவ்வலுவலை தகுதிவாய்ந்த வேறு ஒரு முக்கிய மனிதரிடம் ஒபபடைக்குமாறு பணிவுடன் விணணபபசகிறேன். அப்போது உங்கள் விருப்பம் நிறைவேறும். நான் இந்த அலுவலுக்கு அருகதையற்ற ஒரு ஏழைக் கயக்காரன். என்னை மன்னியுங்கள்'' என்றான்.

தேவதாய் புன்முறுவலுடன் ''மகனே கேள் எனது அலுவல்களை நிறைவேற்ற எனக்குப் பல ஏவலர்கள் உண்டு ஆயின் இவ்வலுவலுககு உன்னையே நான் தெரிநதுளளளன், இவ்வலுவலை உன் மூலமே நிறைவேற்ற வ்ருப்புகிறேன். மீண்டும் நாளைக்கு நீ ஆயரிடம் செல். என் பெயரைச் சொல்லி, என் விருப்பத்தை அவருக்கு விளங்கப்படுத்து, இங்கு தன் பெயரால் ஒரு கோயில் கட்டப்படவேண்டுமென முப்பொழுதும் கன்னியான மரியாளே கேட்கிறாள் எனச் சொல்'' என்றாள்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை, யுவான் ஆயரிடம் சென்றான். நீண்ட நேரம் காத்திருந்தபின் ஆயரைச் சந்தித்து, நடந்தவற்றைக் கூறினான். அதிர்ச்சியடைந்த ஆயர் அவனை வெளியேற்ற விரும்பினார். ஆயின் அவன் கண்களில் சொரிந்த கண்ணீரைக் கண்டு மனமிரங்கி மீண்டும் விபரமாக அனைத்தையும் விசாரித்தார், ஆயருக்கு சிறிது நம்பிக்கை ஏற்பட்டது எனினும் ஓர் அடையாளத்தையே அவர் எதிர்நோக்கினார்.

ஆயர் அனுப்பிய ஒற்றர்கள் யுவானைப் பின் தொடர்ந்தனர். யுவான் மலை மீது ஏறி மாயமாய் மறைந்தது கண்டு, ஒற்றர்கள் ஒன்றுமே செய்ய முடியாது திரும்பிவிட்டனர். யுவான் கூறியதைக் கேட்ட தேவதாய், மறுநாள் வருமாறும் ஓர் அடையாளம் தருவதாகவும் வாக்குப்பண்ணினாள்.

ஆயின் மறுதினம் யுவானின் மாமனுக்கு நோய் கண்டு கடுமையாயிற்று. டிசம்பர் 12 ல் மாமனாருக்கு நோயில் பூசுதல் சடங்கு நடத்த யுவான் ஒரு குருவைத் தேடிப் புறப்பட்டான். அந்த மலையைக் கடக்க வேண்டுமே என்ற எண்ணம் அவன் மனதை வாட்டியது. ஆகவே ஒரு குன்றுப்பாதை ஊடாக விரைந்தான். எனினும் ஒரு மின்னல் வெட்டுப்போன்ற ஒளிப்பிழம்பு குறுக்கிட்டது. மனம் குழம்பிய நிலையின் நின்ற யுவான் தேவதாயைச் சந்தித்தான்.

''எங்கே போகிறாய் மகனே? என்ன நடந்தது?'' என அன்போடு வினாவினாள் அன்னை மரியாள். ''என் மாமன் கடுமையான நோயுற்றிருக்கிறார். மரணிக்கு முன் ஒரு குருவை அழைத்து வர அவசரமாகப் போகிறேன், இது முடிந்ததும் நாளை வந்து, உமது அலுவலை நிறைவேற்றுவேன்.'' என யுவான் பதிலளித்தான்.

'மகனே, என் போர்வைக்குள் அல்லவா நீ இருக்கிறாய் வாழ்வின் ஊற்று நான் அல்லவா? எனது அரவணைக்கும் கரங்கட்குள் அல்லவா நீ இருக்கிறாய் உன் மாமனார் இறக்கமாட்டார், அவரைக் குணப்படுத்துகிறேன். இம் மலை உச்சிக்குப்போ. ஆயர்கேட்ட அடையாளம் கிடைக்கும். கஸ்ரிலியன் ஊர் ரோசாப் பூக்களை அங்கே காண்பாய், கவனமாகஅவற்றைப் பிடுங்கிக்கொண்டு வா'' என அன்னை கூறினாள்.

மீண்டும் ஆயர் இல்லத்துக்குச் சென்ற யுவான், பூக்களைக் கொண்டு வந்ததாக கூறியதும் ஆயரைக் காண அனுமதி கிடைத்தது. ''இன்று காலை தேவதாயைச் சந்தித்தேன், நீங்கள் கேட்ட அடையாளம் பற்றிக் கூறினேன். மலை மீது சென்று அங்கு காணும் மலர்களைப் பிடுங்கிவருமாறு அன்னை ஆணையிட்டாள். இக்காலத்தில் அங்கு மலர்கள் மலர்வதில்லை, ஆயின் அவள் வார்த்தையில் நம்பிக்கை வைத்து மேலே சென்றேன். என்ன அதிசயம்! பனித்துளிகள் படர்ந்த அழகிய மலர்களைக் கண்டேன் என் கைகள் தாங்குமளவுக்கு அப் பூக்களைப் பறித்து அன்னையிடம் கொண்டு வந்தேன். அவள் தன் கரங்களால் அவற்றை ஒழுங்கு செய்து என் மேலாடையின் உட்பையில் தானே பக்குவமாக வைத்து என்னை அனுப்பினாள்'' என்று கூறி மேலாடையை திறந்தான்.

அப்போது மேலாடையின் உட்புறப் பையிலிருந்து மலர்களுடன் கஸ்ரிலியன் ரோசாப்பூக்களும் தரையில் விழுந்தன. ஆயரும் அவருடன் இருந்தவர்களும் வாயடைத்துப் போயினர். அத்துடன் வேறொரு அதிசயத்தையும் அவர்கள் கண்டனர். யுவான்டியாகோவின் மேலாடை கத்தாளை நாரினால் நெய்யப்பட்டது. அதன் உட்புறத்தில் தேவதாயின் உருவம் பதிந்திருந்தது.

## லாசலேத்தில்...

(3ம் பக்க தொடர்)

ஊற்ற இதுவரை யாருமே அனுபவித்திராத துன்பங்களை பல தினங்களிலிருந்து மனுக்குலம் எதிர்கொள்ளும்.''

(தென் அமெரிக்க கௌதமாலாவில் இருந்து அருட்சகோதரி கோமானோ குவாடுலுப்பே அவர்களால் அனைத்துலக ஆயர்கட்கும் அனுப்பப்பட்டிருக்கும் பிரசுரத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

(தொடரும்)

## தேவதாயின்...

(2ம் பக்க தொடர்)

இல்லை. யேசுநாதர் நாளொன்றுக்கு முன்னூறு முறை முழுத் தொண்டனாக பூமியில் விழுந்து செபம் செய்வதுபோல தேவமாதாவும் செய்வாள். சம்மனசுக்கள் வானலோகத்திலிருந்து யேசுநாதருக்கு கொண்டுவந்த பதார்த்தத்தில் இவளுக்கும் ஓர் பங்கு அனுப்பப்பட்டது.

நாற்பது நாளான பின்பு யேசுநாதர் பிதாவுக்கு வணக்கம் செலுத்தி தம்மைப் போல அஞ்ஞாதவாசத்தில் போகின்றவர்களுக்காக செபம் செய்தார். அப்படி அஞ்ஞாதவாசத்தில் ஏறுகின்றவர்களுக்கு விசேஷ கொடைகளைக் கொடுப்போமென்று பிதாவாகிய சர்வேஸ்வரன் இவருக்கு வார்த்தைப்பாடு கொடுத்தார். பின் அவர் ஸ்நாபக அருளப்பரிடம் போனார். அவர் இவர் தேவகுமாரனென்று சனங்களுக்கு வெளிப்படுத்தினார். பின் உலக இரட்சகர் யூதேயா தேசத்திற்கு வந்து பத்து மாதம் அவ்விடத்திலிருந்து எளிய மனமும் தாழ்ச்சியும் உள்ளவர்களுக்கு உலக இரட்சகரைப் பற்றி பிரசங்கம் செய்து உலக இரட்சகருடைய வருகையைக் குறித்து சனங்களுக்கு முன்னுரைத்தார்.

(வளரும்)

# புனித நில்லியூசின் தீர்க்கதரிசன வாக்குரைகள்

இவர் புனித யோவான் கிறிசோஸ்தத்தின் சீடன். கொன்சாந்திநோப்பிள்ஸ் அரண்மனையில் அதிகாரியாக பணியாற்றியவர். இரு பிள்ளைகளின் தந்தை. புனித கிறிசோஸ்தம் நாடு கடத்தப்படுமுன் (398 - 403) பேராயராக இருந்தபொழுது அவரது ஆன்மீக வழிகாட்டியாக இருந்து விவிலியத்தை படிக்கவும், பக்திச் செயல்களில் ஒழுகவும் கற்பித்தார்.

நில்லியுஸ், தன் மனைவியையும் ஒரு மகனையும் வீட்டில் விட்டுவிட்டு, மற்ற மகனையும் அழைத்துக்கொண்டு, சினாய் மலைத் துறவற மடத்தில் சேர்ந்தார். இருவரும் பின்னர் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

சிறிது காலத்தின் பின் வீட்டில் இருந்த அவரது மனைவியும், மகனும், எகிப்தின் துறவற மடத்தில் சேர்ந்தனர். கிழக்குத் திருச்சபையில் நில்லியுஸ் பிரபல்யமானவராகத் திகழ்ந்தார். தனது நூல்கள், கடிதங்கள், கலண்டர்க் கணிப்புகளால் அவ் வரலாற்றுக் கட்டத்தில் முக்கிய பங்காற்றினார்,

பைசாந்திய திருச்சபையில் நவம்பர் 14ம் திகதியில் அவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. ரோமைய திருச்சபையின் வேதசாட்சிகள் பட்டியலிலும் அதே நாளில் நினைவுகூரப்படுகிறார். கி. பி 430ல் அவர் மரித்திருக்கவேண்டும்.

அவர் எழுதிய தீர்க்கதரிசன வாக்குகளாவன:-

1900 ஆம் ஆண்டின் பின் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழும் மக்கள் இனம் காணப்பட முடியாதவர்கள் ஆவர். அந்திக் கிறிஸ்துவின் காலம் நெருங்குகையில் மக்களின் மனங்கள் குழப்பமடையும். உடலங்கள் இச்சைகளால் மந்தமடைந்து துழம்பும். அவமானத்துக்குரிய செயல்களும், ஒழுக்கமற்ற வாழ்க்கை முறைகளும் பெருகும்.

தொடர்ந்து இப்பூமி, இனங் கண்டு கொள்ள முடியாத வகையில் மாறிவிடும். மனிதர்களின் தோற்றம் மாறுபடும். ஆண்களிலிருந்து பெண்களை, அவர்களின் நாணமற்ற செயல்களினால், வித்தியாசம் காண முடியாது போய் விடும். அவர்கள் மாறுபட்ட, அவமானம் நிறைந்த ஆடைகளினாலும், தலையலங்கார நவீன மோடிகளாலும் அருவருக்கத்தக்க நிலைகளுள் அமிழ்ந்திவிடுவர்.

அந்திக்கிறிஸ்துவின் வருகையின் முன்னரே அவனனுப்பும் சோதனைகளினால் மனிதர் கொடூரமானவர்களாகவும், முரட்டு விலங்குகள் போலவும் மாறுவர். அன்பு மறைந்துபோகும். பெற்றோர், பெரியோர், முதியோர் முதலியவர்கள் மேலுள்ள மதிப்பும் பாசமும் அற்றுப் போய்விடும்.

கிறிஸ்தவ பணியாளர், குருக்கள், ஆயர்கள் தற்பெருமை கொண்டவர்களாக விளங்குவர். எவ்வளவுக்கெனில், வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் புரியாத அளவிற்கு.

அக்காலத்தில் கிறிஸ்தவர்களில் திருச்சபையின் விசுவாச மரபுகளும் ஒழுக்க முறைகளும் மாறும். மனிதர் அடக்க வொடுக்க அறநெறிகளைக் கைவிடுவர். மனக்கட்டுப்பாடு அற்ற நிலை, தலை தூக்கும். மனம் பேதலித்து அலையும் போக்கு உருவாகும். பொய்ம்மையும் பேராசையும் அதிகரிக்கும். பணத்தை பெருவாரியாக சேகரிப்பவர்களுக்கு ஐயோ கேடு.

காமம், தன்னினச் சேர்க்கை, மோக பாவங்கள் கட்டுக்கடங்காமல் அதிகரிக்கும், இரகசியத் திட்டங்களால் சமூகத்தில் கொலைச் செயல்கள் பெருகித் தாண்டவமாடும். இப் பாதகங்களினாலும் ஒழுக்கச் சீர்கேட்டினாலும் இறை மக்கள் இக்காலத்தில் தாம் ஞானஸ்நானத்தில் பெற்ற பரிசுத்த ஆவியின் அருள்களையும் மனந்திரும்பும் அருளையும் இழந்துவிடுவர். இறைவனின் திருச்சபையில் இறைபயம், பக்திவைராக்கியம் நிறைந்த குருக்கள் இருக்கமாட்டார். அந்நாட்களில் எஞ்சியிருக்கும் கிறிஸ்தவர்களும் தம் விசுவாசத்தை இழக்க வேண்டி வரும். ஏனெனில் அவர்களை ஒளியின் வழியில் நடத்திச்செல்ல வழிகாட்டிகள் இரார். சந்தர்ப்பங்களும் இருக்கமாட்டா.

இதனால் இவர்கள் தங்களை உலகத்தில் இருந்து பிரித்து, விலகி, தம் ஆன்மீக துன்பங்களைத் தணிக்க அடைக்கல ஒதுக்குகளைத் தேடி அலைவர். ஆனால் அவர்கட்கு பல தடைகள் போடப்படும், இடர்கள் அவர்களைத் தேடிவரும். அந்திக்கிறிஸ்து, முழு உலகுக்கும் பிரபஞ்சத்துக்கும் ஆழுனனாக வருவதற்கு, ஆட்சி செலுத்துவதற்கு அற்புதங்களையும், வியப்பூட்டும் அடையாளங்களையும் செய்துகாட்டுவான்.

'சீரணிக்கும் அறிவையும் ஒரு தீய மனிதனுக்குக் கொடுப்பார். மனிதர் ஓர் உலகில் ஆதியும் அடுத்த அந்தலையில் அந்தமும் கொண்டு விளங்கச் செய்வார். வேறு உலகில் உள்ளவருடன் பேசும் ஆற்றலும் கிடைக்கும். மனிதர் பறவைகள் போல வானத்தில் பறக்கவும், மீன்களைப்போல கடலின் அடிப் பாகம் வரை போகவும் வல்லமை கொடுக்கப்படும்.''

இவற்றையெல்லாம் சாதித்தபின், அந்த அங்கலாய்ப்பு நிறைந்த மக்கள், இப் பொழுதுபோக்குச் செயல்கள் எல்லாம் அந்திக்கிறிஸ்துவின் ஏமாற்று வேலைகள் என அறியாது அவற்றில் வாழ்வைச் செலவிடுவர். அத் தீயவன் விஞ்ஞானத்தை வீண் பெருமையினால் நிறைவுசெய்து, இறை மக்களை தவறான வழிகளில் இட்டுச் சென்று, தமதிரித்துவ இரகசியத்தை மறுதலித்து, விசுவாசத்தை இழக்கச் செய்வான்.

எல்லா நன்மையும் நிறைந்த இறைவன், மனுக்குலத்தின் வீழ்ச்சியைக் காணச் செய்வார். ஆயின் தான் தெரிந்துகொண்டவர்களுக்காக, அந்நாட்களைக் குறைத்து விடுவார். இல்லாவிடில் அத்தியோன், இந்த எஞ்சியோரையும் அழிவுக்குள் இட்டுச் செல்வான்,

திடீரென தண்டனையின் வாள் கருவி தோன்றி எதிரியையும் அவன் ஊழியரையும் சங்காரம் பண்ணும். ●

---

யாக்கோபு.,
(2ம் பக்க தொடர்)

யின் முன் அறிவிப்பு இதுவேயன்றி வெறும் வேடிக்கை காட்சிகள் அல்ல.

அங்கு சோபித்தா, நவின் பு. சில்வா முதலியோர் எமது முதல் எதிரி தமிழன் இரண்டாவது அவர்கட்குப்பின் வரும் சிங்கள கிறிஸ்தவம் எனப்பிரசாரம் செய்யவில்லையா?

அவர்கள் மனந்திரும்பி அன்னையின் செய்திக்குள் நற்செய்திக்குள் வரச் செபிபோம். நாம் இந்தக் காட்சிகளையும் இன்னும் உலக காட்சிகளையும் கண்டு கேட்டும் வேடிக்கை வினோதப் பிரியராக வாழ்வோமா? அல்லது தேவதாய் தரும் செய்திகளைக் கேட்டு நடக்க முன் வருவோமா?

அவளது குரல் சுவிசேஷக்குரல் அந்த இறைவாக்கு இன்று பெரும் பஞ்சம். உண்மையிலேயே பெரும் பஞ்சம்.

அத்துடன் இந்த அறிவிப்புக்கள், சிங்கள சமூகத்துக்கு மட்டுமல்ல பல்வேறு மாயைகளால் ஆட்டி அலைக்கழிக்கப் படும் எம் தமிழினத்துக்கும் உரிய அறிவுறுத்தல்களே என முன்கூட்டியே உணர்ந்து பெருவெள்ளம் வருமுன் உறுதியான அணையை, அரணை கட்டியெழுப்புவோம்.

# கடவுளை எதிர்க்கும் மனப்பான்மை

[சுவாமி கோபியினூடாக தேவதாய் கூறுபவை.]

1. உனது வாழ்வை அதிக செபத்துடன் தொடங்கு இன்றைய வாழ்வின் பல குழப்பங்களில் பாதுகாப்பான அடைக்கலத்தை என் இருதயத்தில் மட்டுமே நீ காண்பாய்.

2. குழப்பங்களும் துயர ஏக்கமும் துன்ப துரிதங்களும் நாளுக்கு நாள் அதிகரிக்கவே செய்யும். ஏனென்றால் என் திருக்குமாரனால் மீட்கப்பட்ட மனுக்குலம் கடவுளிடமிருந்து மென்மேலும் தூர அகன்று அவருடைய கற்பனையை மீறுகிறது.

3. சரீர இச்சையின் பசாசு அனைத்தையும் திண்டி அசுத்தப்படுத்தி விட்டது. என் எளிய மக்களே! நீங்கள் எவ்வளவு நோய்ப்பட்டுவிட்டீர்கள்! எவ்வளவு பாதிக்கப்பட்டு விட்டீர்கள்.

4. கடவுளை எதிர்க்கும் தன்மையானது மனுசகுலத்தை வஞ்சித்துவிட்டது. நாஸ்திகம அநேகரைக் கவ்விப் பிடித்துள்ளது; விசுவாசம், சிநேகம் என்ற ஒளியை முழுவதும் அவித்துவிட்டது.

5. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள சிவந்த பறவைநாகம் இதுவே அதை எடுத்து வாசியுங்கள். பிள்ளைகளே, ஏனென்றால் அதன் நிறைவேற்ற நேரம் இதுதான். இது முதல் என் பிள்ளைகளில் எத்தனை பேர் பசாசின் இத் தப்பறைக்கு பலியாகப்போகின்றார்கள்! என் குருக்கள் மத்தியிலும், விசுவாசியாதவர்கள் – ஆயினும் என் திருச்சபையின் இருந்துகொண்டிருக்கிறவர்கள் – எத்தனையோ பேர் உள்ளார்கள்! அவர்கள் செம்மறிபோல் வேடந்தரித்து உண்மையான ஓநாய்களாக எண்ணற்ற தொகையினரான ஆன்மாக்களை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

6 இனிமேல் கடவுளின் நீதிக் கரத்தை எதுவும் தடுத்து நிறுத்த இயலாது. தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் அன்பாலும் செபங்களாலும் அவர்கள் அனுபவிக்கிற துன்பங்களாலும் இந்நீதிக் கரம் விரைவிலேயே சாத்தானுக்கும் அவனைப் பின் செல்கிறவர்களுக்கும் எதிராக கட்டவிழ்ந்து வரும்.

7, பெரியதும் உரைக்க இயலாததுமான துன்ப வேதனைகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. மனிதர்கள் இதை அறிந்தால் ஒருவேளை அவர்கள் மனந்திரும்பக்கூடும்,

8. ஆனால், என்னுடைய செய்திகளுக்குக் காதுகொடுத்தது யார்? என் கண்ணீர்களின் பொருளைக் கண்டுணர்ந்தது யார்? தாய்க்குரிய என் கூப்பிடுதலைக் கேட்டது யார்? ஏறக்குறைய ஒருவருமில்லை – ஒருசில அபூர்வ புறக்கணிக்கப்பட்ட ஆன்மாக்களைத்தவிர இவர்களுக்காகவே இத்தண்டனை இன்னும் பிந்திப் போடப்பட்டுள்ளது.

9. ஆனால் ஒரு பெரிய அடையாளம் நிறைவேறாமல் இவ்வருடம் முற்றுப் பெறாது. தாயன்போடு நான் உருவாக்கி தயாரித்த ஆன்மாக்களே செபியுங்கள்! செபியுங்கள்!! செபியுங்கள்!!!

10. விசேஷமாய் என் பிள்ளைகளாகிய நீங்கள் பகட்டானதும் தேவைக்கு அதிகப்படியானதுமான பொருட்களை விட்டுவிடுங்கள் இந்த நேரங்கள் மிகவும் கண்டிப்பானவை. நீங்கள் என்னுடனும் என்னிலும் எனக்காகவும் மட்டுமே வாழ வேண்டும். விழிப்பாயிருங்கள். தயாராயிருங்கள். நீங்கள் எனக்குத் தேவைப்படுவீர்கள். ஏனென்றால் என் வெற்றியின் தருணம் வந்துள்ளது.

(கடந்த 25 வருடங்களாக Fr. கோபிக்கு தேவதாய் கொடுத்த செய்திகள் 1997 ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது.)

---

# சிந்தனைக் கதிர்

அதிக உழைப்பால் களைத்துப் போகிறேன் என்றார் வயோதிபர் ஒருவர். அது கேட்டு ஆச்சரியமடைந்தான் அந்த இளைஞன்.

''உண்பதும் உறங்குவதும் தானே உங்கள் அலுவல்?'' என வினவினான்.

''எனது அலுவல்களை நீர் அறியீர் போலும், தினசரி இரு வல்லூறுகளை அடக்கவேண்டும். இரு முயல்கள் தப்பியோடாது பாதுகாக்கவேண்டும். இரு யானைகளை என் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.''

''ஒரு நாகபாம்பை சிறையிருத்த வேண்டும். ஒரு சிங்கத்தை எப்போதும் சங்கிலிகளால் பிணைத்து வைத்திருத்தல் வேண்டும். இவைதான் எனது நாளாந்த அலுவல்கள்'' என்றார் வயோதிபர்.

''அப்பா! நீங்கள் தமாஷாகப் பேசுகிறீர்கள்'' என்ற இளைஞனை நோக்கி வயோதிபர் கூறுகிறார்,

''வல்லூறுகள் என்பது என் கண்கள் எனது ஆன்மாவுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவைகள் அனைத்திலுமிருந்து என் விழிகளை அடக்க வேண்டும்.''

''முயல்கள் எனது கால்கள். தீய வழிகளில் செல்லாதவாறு அவற்றைக் கட்டிக் காக்க வேண்டும்.''

''யானைகள் எனக் குறிப்பிடுவது என் கரங்களை, தீய வழிகளை அவை நாடாது, நல்லதை, பிறருக்காக உழைப்பதை அவை இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.''

''நாகபாம்பாகிய எனது நாவை ஆவலாதி, அவதூறு, கோள், குண்டனி என்ற ஆலகால விஷங்களை அள்ளித் தெளிக்காதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

''சிங்கம் என்பது எனது இதயம். அகங்காரம், பெருமை, ஆடம்பரங்களை என் சிந்தனை நாடாதிருக்க இரவும் பகலும் கவனித்துக்கொள்ள வேண்டும்', எனப்பதிலளித்தார் அந்த வயோதிபர்.

இவை அந்த வயோதிபருக்கு மட்டுமே உரிய தினசரி அலுவல்கள் அல்ல எம் ஒவ்வொருவரினதும் தினாந்த கடமைகள் என்பதை மறவாதிருப்போமாக.

---

Print : "Annai printers", Jaffna
Published by PAX CHRISTI.
St JOSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna